100 20/2/18

## பத்திரிக்கைச் செய்தி

## கால்நடை பராமரிப்புத்துறை, வேலூர் மண்டலம்

## கோமாரிநோய் தடுப்பூசிப்பணி திட்டம் (14வது சுற்று)

## 01-03-2018 முதல் 21-03-2018 வரை

கோமாரி நோயானது வைரஸ் என்று சொல்லப்படுகின்ற நச்சுயிரியின் மூலம் கால்நடைகளுக்குப் பரவுகின்றது. இந்நோயினால் அதிக பாதிப்பு உண்டு. கோமாரி நோயானது தீவனம், தண்ணீர், காற்று மற்றும் கால்நடைகள் ஒன்றோடொன்று நெருங்கிப்பழகுவதாலும் பரவுகிறது. காற்று வீசும் திசையில் காற்றுத்துகள்கள் மூலம் சுமார் 300 கி.மீ. தூரம் வரை இந்நோய் பரவும். பொதுவாகக் கோடைக்காலத்தில் இந்நோய் அதிகம் பரவுகிறது. ஆரம்பத்தில் காய்ச்சல் 41 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும். வாயிலிருந்து சளி போன்ற நுரையுடன் கெட்டியான உமிழ்நீர், கம்பி போன்று தொங்கிக் கொண்டிருக்கும். நோய்கண்ட மாடுகள் தொடர்ந்து சப்புக் கொட்டியபடியிருக்கும். வாயின் உட்பகுதி, நாக்கின் மேல்புறம், கால்களில் குளம்புகளுக்கிடையே உள்ள தோலிலும், மடி மற்றும் காம்புகளில் நீர்க் கோர்த்த கொப்புளங்கள் மற்றும் புண்கள் ஏற்பட்டு தீவனம் உட்கொள்ள முடியாத நிலையும், நொண்டிக் கொண்டும் இருக்கும். நாளடைவில், குளம்புகள் தானாக கழன்றி விழ நேரிடலாம். சினையுற்ற மாடுகளில் கருச்சிதைவும் ஏற்படலாம். பால் உற்பத்தியும் கணிசமான அளவிற்கு பாதிக்கப்படும். நோய் கண்ட பசுக்களில் பால் அருந்தும் கன்றுகள் இறந்துப்போகும். கோமாரி நோயினால் பாதிக்கப்பட்ட கறவைப்பசுக்கள், எருமைகள் மற்றும் கிடேரிகள் பல மாதங்களுக்குச் சினைப் பிடிக்காமல் கால்நடை வளர்ப்போருக்கு அதிக பொருளாதார நட்டத்தையும் ஏற்படுத்திவிடும். கால்நடை நோய்களுள் கோமாரி நோய் மிக முக்கியமான நோயாகும். எனவே, 100 சதவிகித அளவிற்கு இந்நோயினைக் கட்டுபடுத்திட மத்திய அரசின் நிதி உதவி திட்டத்துடன் ஒவ்வொரு கால்நடை மருந்தகக் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து கிராமங்களிலும் "கோமாரி" நோய் கட்டுபடுத்துதல் திட்டம் - 14வது சுற்று தடுப்பூசி முகாம் வருகின்ற மார்ச் 01.03.2018 முதல் 21.03.2018 முடிய 21 நாட்களுக்கு இப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது. நான்கு மாதங்கள் முடிந்த இளங்கன்றுகளுக்கும் சினையாகவுள்ள பசுக்கள் மற்றும் எருமைகளுக்கும் இத்தடுப்பூசியினை போடுவது அவசியமாகும். இதனால், பால் கறக்கின்ற பசுக்கள் மற்றும் எருமைகளில் பால் உற்பத்தி குறையாது. இப்பணிக்கென பிரத்யேகமாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அளவில் கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் ஆவின் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் குழுக்கள் அமைக்கப்பட்டு முகாம்கள் நடத்தப்படவுள்ளன. வட்டார வளர்ச்சி தனி அலுவலர் மூலமாக தண்டோரா மூலமாகவும், ஒலிபெருக்கி மூலமாகவும் பொதுமக்களுக்கு இவ்விவரத்தினை தெரிவித்து அனைத்து கால்நடைகளுக்கும் இத்தடுப்பூசிப்பணி மேற்கொள்ள ஒத்துழைப்பு வழங்கவும். விவசாயப் பெருமக்களும், பண்ணையாளர்களும், கால்நடை வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரும், மற்றும் தொழில் முனைவோரும் முகாம்கள் நடைபெறும் போது, தங்களது கால்நடைச் செல்வங்களை ஓட்டிக்கொண்டு வந்து கால்நடை பராமரிப்புத் துறையினர் மூலம் தடுப்பூசியினை போட்டுக் கொள்ளும்படியும், கோமாரி நோயின் பாதிப்பிலிருந்து கால்நடைகளை பாதுகாத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-
மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்.

மண்டல இணை இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத்துறை, வேலூர்.